சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – "தன்னிறைவுத் திட்டம்" – 2019–2020–ஆம் ஆண்டில் திட்டத்தினை செயல்படுத்துதல் – ரூ.25.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – வரையறுத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1) துறை

அரசாணை(நிலை) எண்.92

நாள்: **24.7.2019**
விகாரி – ஆடி– 8
திருவள்ளுவர் ஆண்டு–2050

படிக்கப்பட்டவை.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 18425/2019/SSS–1, நாள் 3.5.2019.

----

ஆணை:

ஊரகப் பகுதி மக்களின் சுய சார்புத் தன்மையை ஊக்குவித்து பொது மக்கள் பங்கேற்புடன் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழக அரசு 2011–2012–ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை மீண்டும் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு வருடமும் அரசு நிதி ஒதுக்கீடு செய்து வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுகிறது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 2019–2020–ஆம் நிதியாண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு கோரி வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:-

(i) 2019–2020–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.50.00 கோடிக்கு (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படுகிறது, அதில் ரூ.25.00 கோடி (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) விடுவிக்கப்படுகிறது.

(ii) 2019–2020–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே பத்தி 3(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:–

"2515 – 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – JW தன்னிறைவுத் திட்டத்தை செயல்படுத்துதல் – 309 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை.
பழையது – (த.தொ.கு 2515 00 800 JW 0934)
புதியது – (த.தொ.கு 2515 00 800 JW 30903)"

5. மேலே பத்தி 3(i)-ல் ஒப்புளிக்கப்பட்ட தொகையினை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், அவர் 2019–2020–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயற்படுத்தியமைக்கான முன்னேற்ற அறிக்கையினை அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. அனைத்து பணிகளிலும் மூன்று நிலைகளில், அதாவது ஆரம்ப நிலை, நடப்பு நிலை மற்றும் முடிவு நிலைகளில் புகைப்படங்கள் கட்டாயம் எடுக்கப்பட வேண்டும்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.34339/RD/2019, நாள் 23.7.2019 –ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை–5.
பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை–108.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் அவர்களின் முதன்மைச் செயலாளர்/
செயலாளர் – II, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி (ம) சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. [illegible] 24.7.2019

பிரிவு அலுவலர்

**அரசாணை (நிலை) எண்.92, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை, நாள் 24.7.2019**

**இணைப்பு**

**2019–20 ஆம் ஆண்டிற்கான "தன்னிறைவுத் திட்டம்" செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.**

1. முன்னுரை:

சமுதாய சொத்துக்களைத் திட்டமிட்டு உருவாக்குவதற்கும், நிதியளிப்பதற்கும் அவற்றின் நிலைப்புத் தன்மைகளை உறுதி செய்வதற்கும் பொது மக்களின் பங்கேற்பு அவசியமானதாகும். பொதுமக்களின் சுயசார்பு தன்மையை ஊக்குவிப்பதற்கும், மேன்மைப்படுத்துவதற்கும், சமுதாய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிப்பதில் அவர்களின் பங்களிப்பை அதிகரித்து அதன்மூலம் தன்னிறைவு பெற செய்யவும் அரசு தன்னிறைவுத் திட்டத்தினை 2011–12ம் ஆண்டு முதல் செயல்படுத்துகிறது. இந்த வகையான பொது மக்கள் பங்கேற்பு அணுகுமுறையின்படி, பொது மக்கள் பங்கேற்பு மற்றும் அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் சமுதாயத்தின் தேவைகள் 'தன்னிறைவு' அடைவதற்கு வழிவகை செய்கிறது.

தன்னிறைவுத் திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

2. பொதுமக்கள் பங்களிப்பு:

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

3. 'தன்னிறைவுத் திட்டத்தின்' கீழ் பணிகளைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் :

i) 'தன்னிறைவுத் திட்டத்தின்' கீழ் பணிகளை எடுத்துச் செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாயம் ஆகியவற்றின் மூலமாக உருவாகலாம்.

ii) எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணியினைக் குறிப்பிட்டு பொது மக்களின் பங்களிப்பான மூன்றில் ஒரு பங்கு தொகையை வழங்க சம்மதம் தெரிவித்து விண்ணப்ப படிவம் ஒன்று கோரிக்கை வடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

iii) மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உறுதி செய்வார். அவ்விதிமுறைகள் திருப்தி அளிக்கும் பட்சத்தில் திட்டப் பணியினை செயல்படுத்தும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் /பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடம் செலுத்த வேண்டும்.

iv) உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

v) பணிகளைச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதியை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன், மாவட்ட ஆட்சித் தலைவர் /பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் பெற வேண்டும்.

vi) உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு/ துறையின் ஒப்புதலை மாவட்ட ஆட்சித்தலைவர் /பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் பெற வேண்டும்.

vii) இத்திட்டத்தின் கீழ் குறைவாக நிதி இருக்கும் பட்சத்தில், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின், அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

viii) மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அதற்கான பங்களிப்பை தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறலாம்.

**4.** எடுத்துச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட பணிகளின் பட்டியல்:

கீழ்க்காணும் பணிகள் 2019–20 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படலாம்:

i) அரசு பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல் , மிதி வண்டி நிறுத்துமிடம் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல்.

ii) அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல். தமிழ்நாடுவக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு(Public Wakf) சொந்தமான இடுகாடுகள் உட்பட இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் இதர பொது வசதிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

iii) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், பள்ளி சமையல் கூடங்கள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல். நூலக கட்டடங்களுக்கான பணி மேற்கொள்ளும் பொழுது புத்தகங்கள் வாங்குவதற்கு தேவையான நிதி பங்களிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

iv) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சமுதாய கட்டடங்கள், குடிநீர் வழங்குதல், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்குதல்.

v) ஆண்கள் மற்றும் பெண்களுக்கென ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

vi) பாலங்கள், சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை /கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக் தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பித்தல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துக்களை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.

vii) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island) மற்றும் நீரூற்று (Fountain) போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

viii) அரசு பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள கட்டடங்களுக்கு தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கக்கூடாது.

ix) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து வகைப்பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான மேம்பாட்டு பணிகள்.

x) அரசு மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான பொது கட்டடங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்.

xi) குடிநீர் வழங்குதலுக்கானஎதிர் சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு நிலையம் (Reverse Osmosis Plant) அமைத்தல்.

**5.** வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள்:

பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ள அனுமதிக்கப்படக் கூடிய பணிகளைக் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ளலாம்:–

i) சொத்தின் உரிமைதாரரின் முன் அனுமதி பெறாமல் எந்த நிரந்தர கட்டடங்களும் கட்டக்கூடாது.

ii) பணிக்கான பணிக்கான பங்களிப்பை அளிக்க முன்வரும் நபர்/நிறுவனம் (Contributing person / entity) சொத்திலோ அல்லது அதன் பயன்பாட்டிலோ (Property / use of property) / சொத்தினை பராமரிப்பதிலோ (Maintenance of property) எந்த உரிமையும் கோர முடியாது.

iii) பணிக்கான பங்களிப்பு நிதி வழங்கியவர்களின் பெயர்களை, மாவட்ட ஆட்சித்தலைவரின் /பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் முன் அனுமதி பெற்று, பணி நடைபெறும் இடத்தில் பெயர்ப் பலகை மூலம் காட்சிக்கு வைக்கலாம். பெயர்ப் பலகையில் மூன்றில் இரண்டு பகுதிக்கு குறையாத அளவில் "தன்னிறைவுத் திட்டம் " என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பணி மேற்கொள்ளப்படும் கட்டடம்/இடத்தின் கலைநயத்திற்கு குந்தகம் ஏற்படாத வகையில், பங்களித்தோர் பெயர்ப் பலகைவைக்கஅனுமதிக்கலாம். ஆனால் பங்களித்தோர் அந்த சொத்தின் மீது உரிமையோ/குத்தகைக்கு உரிமையோ அல்லது பராமரிப்பு உரிமையோ கோரக் கூடாது.

iv) திட்ட பணிக்கு பங்களித்தோர் போதுமான அக்கறை காட்டவில்லை அல்லது ஏதாவது நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் கருதினால், பணியைச் செய்ய அல்லது பராமரிக்க வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டு அப்பணி தொடர அனுமதி மறுக்கப்படும்.

**6.** எதிர்மறையான பட்டியல் /தடை செய்யப்பட்ட பணிகள்:

விதிவிலக்காக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர, கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இடம்பெற்ற பணிகளைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது:–

1) பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் உள்பட மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்.

**விதிவிலக்கு :** எனினும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல், அனைத்து வகையான அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொதுவிநியோகக் கடைகள் கட்டுதல், நேரடி கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள் மற்றும் மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவற்றை எடுத்துச் செய்யலாம்.

2) அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்குதல்.

விதிவிலக்கு:

(i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவ – மாணவியர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் அனுமதிக்கப்படுகிறது. அதேபோல் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மூன்று சக்கர மிதிவண்டி, சிறு லாரிகள் போன்ற வாகனங்கள் வாங்கலாம்.

(ii) பொது மக்களின் பாதுகாப்பிற்காக காவல் கண்காணிப்பாளர் / பெருநகர சென்னை மாநகரக் காவல் ஆணையர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மூலம் உரிய கொள்முதல் விதிகளைப் பின்பற்றி கண்காணிப்பு (CCTV – Closed Circuit Television) கேமராக்கள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை வாங்குதல்.

3) அரசு உதவி பெறும் / சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் / சுயநிதி கல்வி நிறுவனங்களுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

4) அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் சார்ந்த பணிகள்.

5) மானியம் மற்றும் கடன், மத்திய மற்றும் மாநில / யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

6) நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

7) முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகையினை மீளச் செலுத்துதல்.

8) தனிநபர் / குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

9) அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

10) மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

11) குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் அதைப் போன்ற நீர்நிலைகளை தூர் வாருதல்.

விதிவிலக்கு:

1) மாவட்ட ஆட்சியர் அவசியம் என கருதினால் பொதுப்பணித் துறை கண்மாய்களை மட்டும் தூர் வாருதல், கரைகளை பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைக் கட்டுதல் / சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித்துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவிகிதத்திற்கு குறையாமல் இருக்கவேண்டும். தேவையின் அடிப்படையில் நீர் வரத்து கால்வாய் மற்றும் உபரிநீர் கால்வாய் ஆகியவற்றிற்கான பணிகளை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) / நீர்வள நிலவளத் (IAMWARM) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம்.

2) நீர் வழங்கும் திட்டத்திற்கு முக்கிய ஆதாரமாக உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களை தூர்வாரும் பணியினை 50 சதவிகித பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளலாம். மேற்காணும் பணியினை செயல்படுத்தும்போது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளில் உள்ள நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

12) சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை நிலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்).

**7) பணிகளை நிறைவேற்றுதல்:**

i) பணியை மேற்கொள்ளவிருக்கும் உள்ளாட்சி அமைப்போ அல்லது சம்மந்தப்பட்ட துறையோ தகுதி வாய்ந்த அலுவலரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அட்டவணையிட்ட விலைப்பட்டியலின் அடிப்படையிலோ அல்லது பொதுப் பணித்துறையால் சமீபத்திய அட்டவணையிட்ட விலைப்புள்ளி பட்டியலின் அடிப்படையிலோ, பணிக்கான மதிப்பீட்டைத் தயாரித்து அளித்த பிறகே நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு தொகை கேட்பு வரைவோலை மூலம் "மாவட்ட ஆட்சியரின் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் தன்னிறைவுத் திட்ட கணக்கு" என்ற பெயரில் பெறப்பட வேண்டும். மீதமுள்ள தொகை, அரசின் தன்னிறைவுத் திட்ட நிதியிலிருந்து விடுவிக்கப்படும். மேலும், மத்திய மற்றும் மாநில அரசின் இதர திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள், இத்திட்டத்திற்கு இசைவாக இருந்தால் அத்திட்டங்களின் நிதியும், பொது மக்களின் பங்களிப்பு நிதியுடன் ஒருங்கிணைக்கப்படும்.

ii) பணிகள்யாவும் 1998–ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகள்படியும், தமிழ்நாடு ஊராட்சிகள் (வேலையின் வரைபடம் தயாரித்தல் மற்றும் வேலையின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மாதிரி ஒப்பந்த நிபந்தனைகள்) விதிகள் 2007 மற்றும் பின்வரும் அரசாணைகளில், நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, ஒப்பந்த நடைமுறை மற்றும் பணிகள் அளவீடுகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள வழிவகைகளை பின்பற்றி செயல்படுத்தப்பட வேண்டும்:-

(a) அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–1) துறை, நாள் 20.12.2007.

(b) அரசாணை (நிலை) எண்.54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–1) துறை, நாள் 22.05.2014.

(c) அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா–1) துறை, நாள் 21.08.2018.

iii) a) பொதுமக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவர்களோ, மேற்கண்ட பணியை தாங்களாகவோ அல்லது அவர்களின் முகவர்கள் மூலமாகவோ செய்திட விரும்பினால், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும்

போது எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, அப்பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால், பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்கலாம்.

b) ஆனால், பொதுப்பணித்துறையின் குளங்களை தூர்வாரும் பணிகளில் பொதுமக்களின் பங்களிப்புத்தொகை 50சதவீதத்திற்கு மேல் இருப்பினும் அப்பணி ஒப்பந்தப்புள்ளி மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும். வேலையின் மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களின் வகைகளை (A அல்லது B அல்லது C) பொதுப்பணித்துறை நிர்ணயித்தபடி வகைப்படுத்தலாம்.

c) இதேபோல, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அத்தியாவசிய நீர் ஆதார குளங்களை தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50 சதவிகிதத்திற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ளலாம்.

d) பணிக்கான பொதுப்பங்களிப்பை அளித்த முகமை / நிறுவனம் தானே பணியை நிறைவேற்ற முன்வரவில்லை என்றால், அப்பணிகள், 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட விதிகளின் வழிவகைகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும்.

iv) பணிகள் மேற்பார்வையிடுவதற்கான தொழில்நுட்ப அமைப்பை (Technical authority) மாவட்ட ஆட்சித்தலைவர் /பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முடிவு செய்வார். அந்த முகமையானது உள்ளாட்சி அமைப்பாகவோ அல்லது தொடர்புடைய துறையாகவோ இருக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் தேவைப்படும் நிதியை இம் முகமைக்கு விடுவிப்பார்.

v) a) உள்ளாட்சி அமைப்புக்கோ / தொடர்புடைய துறைக்கோ (Line Department)/ பங்களித்தவருக்கோ / தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது மேற்கூறிய நிறுவனங்கள் ஏதாவது ஒன்றின் மூலம் பணியை மேற்கொள்ளும் தனியருக்கோ பணி நிறைவேற்றல் ஆணை வழங்கப்படும்.

b) பணிகளை நிறைவேற்றுவது, தனியார் அமைப்பாகவோ / சங்கமாகவோ அல்லது பொது மக்களாகவோ இருந்தாலும், இப்பணியை செயற்படுத்தும் / கண்காணிக்கும் உள்ளாட்சி அமைப்புகள் / சம்மந்தப்பட்ட துறையிடம் மட்டுமே இதற்கான நிதி இருக்கும்.

c) அளவு மற்றும் அளவு சரிபார்த்தல் போன்றவை சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அமைப்பால் சரிபார்க்கப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகளின்படியே பட்டியல்கள் ஒப்பளிப்பு செய்யப்படும்.

d) உயர் நிலைப் பள்ளி / மேல்நிலைப்பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிக்கூட கட்டடங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை அல்லது மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது செயற்படுத்தும் துறையின் தொழில்நுட்ப குழு ஆகியன மேற்கண்ட பணி குறித்த கண்காணிப்புத் தவிர, கட்டடத்திற்கான கட்டுமான ஸ்திரத்தன்மை குறித்து சான்றிதழ் வழங்க வேண்டும். கட்டடப்பணிக்கான பணி நிறைவு அறிக்கையை தொழில் நுட்பக்குழு தயார் செய்ய வேண்டும்.

vi) 100 விழுக்காடு மக்கள் பங்களிப்புடன் பணியை மேற்கொள்ளும் இனங்களில் சம்பந்தப்பட்ட பயனாளி சங்கம் / பங்களிப்பு அளித்தவர்கள் தாங்களே பணியை நிறைவேற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தால், தன்னிறைவுத் திட்டத்தின்படி செலுத்த வேண்டிய முன்பண பங்களிப்பு தொகையை செலுத்துமாறு வலியுறுத்தாமல் பணியை நிறைவேற்ற அவர்களிடம் ஒப்படைக்கலாம். எனினும், பணியானது கட்டட வடிவமைப்பு மற்றும் கட்டட உறுதித் தன்மைகளுக்கு ஏற்ப பணி அளவுகள் சரிபார்க்கப்படுவதற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு (Public Wakfs) சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் இதர வசதிகள் அமைக்கும் பணிகளை, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கென தனியே, பொறியியல் பிரிவு ஏதும் இல்லாததால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக பணிகள் மேற்கொள்ளலாம்.

viii) சென்னை மாநகராட்சியை பொறுத்த வரை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள வேண்டிய அனைத்து பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பதிலாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் செயல்படுத்துவார். அதன்படி, பணிகளுக்கான நிர்வாக அனுமதியினைபெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் வழங்குவார்.

**8. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பராமரித்தல்.**

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட பணிகளை/சொத்துக்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அல்லது சம்பந்தப்பட்ட துறையோ பராமரித்து வருவது மிகவும் விரும்பத்தக்கது ஆகும்.எனவே சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் உதவியுடன் இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை தொடர்ந்து பராமரித்து வருவதற்காக, சுயமாக நிதிபெற்று செயல்படும் ஒரு பயனாளிகள் குழுவை உள்ளூர் மக்கள் அமைக்க வேண்டும். உள்ளூர் தேவைக்கேற்ப திட்டமிட்டு, பணிகளை செயல்படுத்தி பின்னர் பராமரித்து வருவதற்கு உள்ளூர் மக்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

**9. நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி விடுவித்தல்**

i) 2019-20–ம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்த வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii) மொத்த ஒதுக்கீடான ரூ.50 கோடியில், 74 விழுக்காடு அனைத்து மாவட்டங்களுக்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் மக்கள் தொகை அடிப்படையில் மறு ஒதுக்கீடு செய்யப்படும். இத்தொகை பணிகளின் செயல்திறன் மற்றும் நிதித்திறன் முன்னேற்றத்தின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் விடுவிக்கப்படும். மேலும், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

iii) மொத்த ஒதுக்கீட்டில் 1 விழுக்காடு செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேற்படி தொகையில் 10 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மீதமுள்ள தொகை மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

iv) மொத்த ஒதுக்கீட்டில் மீதமுள்ள 25 விழுக்காடு, மாவட்ட ஆட்சியர்களால் கோரப்படும் சிறப்பு பணிகளை செயல்படுத்த அனுமதி வழங்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

a) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சிறப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாவட்டத்திற்கு கூடுதல் நிதி தேவைப்படின், அத்தகைய திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுப்பவேண்டும். இத்தகைய கருத்துருவினை அனுப்பும் முன், மாவட்டத்திற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு முதலில் முழுமையாக நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

b) தேவைப்படின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால், டிசம்பர் 31–ஆம் தேதி அன்று உள்ள நிலவரப்படி,மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் உள்ள தொகையை, திட்ட செயல்பாடுகள் நன்றாக உள்ள மற்றும் கூடுதல் நிதி தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்து வழங்கப்படும்.

c) சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட நிதியில் டிசம்பர் 31–ஆம் தேதி நிலவரப்படி செலவு செய்யப்படாமல் நிதி எஞ்சி இருப்பின் மற்ற மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும்.

v) a) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் நிதி தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் தன்னிறைவுத் திட்டத்திற்காக தொடங்கப்பட்ட சேமிப்பு கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்.

b) மாவட்ட ஆட்சித் தலைவரால் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரால் பெறப்படும் அனைத்து பங்களிப்புகளும் "மாவட்ட ஆட்சித் தலைவரின் தன்னிறைவுத் திட்டக் கணக்கு" / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் தன்னிறைவுத் திட்டக் கணக்கு" என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையாக இருக்க வேண்டும். பெறப்பட்ட எல்லா பங்களிப்புகளுக்கும் ஒப்புகை வழங்கப்பட வேண்டும்.

c) பெறப்படும் பங்களிப்புக்காக ஒரு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். இந்த கணக்குகளையும், பதிவேட்டையும், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் பராமரித்து வர வேண்டும்.

d) நிர்வாக அனுமதி வழங்கும் போதே பொதுமக்கள் பங்களிப்புத் தொகை உட்பட 75 விழுக்காட்டு தொகையை உள்ளாட்சி அமைப்பு மற்றும் தொடர்புடைய துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் விடுவிக்கலாம். மீதமுள்ள தொகையை பயன்பாட்டு சான்றிதழ் ( Utilisation Certificate) பெற்ற பிறகு தான் விடுவிக்க வேண்டும்.

vi) உத்தேசிக்கப்பட்ட பணி பல்வேறு காரணங்களால் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தால், பெறப்பட்ட நன்கொடையின் முழு தொகையையோ அல்லது பகுதி தொகையையோ, நடைபெற்றுள்ள வேலை மற்றும் அதன் மதிப்புக்கு ஏற்ப, திருப்பி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஆணையிடுவார். இது போன்ற நேர்வுகளில், பங்களிப்புத் தொகைக்கு வட்டி ஏதும் இன்றி தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, பங்களிப்பு வழங்கியவருக்கு திருப்பி அளிக்கப்படும்.

**10. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC)**

தன்னிறைவுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் இத்திட்டத்தின் சாதனை பட்டியல்கள் குறித்தும் உள்ளூர் பத்திரிகை மூலம் வெளியிட தேவையான தொடர்பு மற்றும் விளம்பரங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்திடல் வேண்டும். தேவையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்கள் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல் //

N. [signature] 24/7/19
பிரிவு அலுவலர்

[handwritten initials] 24/7/19